KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2 No. n09 (2019)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
Vol. 2 No. n09 (2019): KALANJIYAM February 2019

UGC Approved by Transparent Peer Review

திருக்குறளில் நட்பு

Friendship in Thirukkural

Dr. U. Alibava[1*]

[1] Professor and Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli – 620024, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0000-0002-2051-7002

*தொடர்புக்கு: alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 09 January 2019
Revised: 13 January 2019
Accepted: 16 January 2019
Published: 01 February 2019

Peer review
Double-blind peer review

Keywords
Thirukkural
Friendship
Thiruvalluvar
True Friendship
Purananuru
Naladiyar
Pazhamozhi Naanuru
Tamil Ethics
Classical Tamil Literature

ABSTRACT

Friendship occupies a distinctive place among human relationships because it is founded not merely on social contact but on affection, mutual understanding, trust and virtuous conduct. In the Thirukkural, Thiruvalluvar examines friendship as an important ethical principle and explains its nature, the qualities of a true friend, the need to examine a person before forming a friendship, and the importance of preserving worthy relationships. This article analyses the ideas on friendship expressed in the Thirukkural and compares them with related thoughts found in Purananuru, Naladiyar and Pazhamozhi Naanuru. It discusses the inward bond that makes friendship genuine, the readiness to stand by a friend in times of distress, the duty to correct a friend's faults, and the value of associating with people of good character. The friendship between Kopperuncholan and Pisiranthaiyar in Purananuru is considered as an illustration of a bond sustained by affection and shared values even without frequent face-to-face contact. The comparisons with Naladiyar further highlight the significance of wise companionship, patience and forbearance. The study shows that these classical Tamil works regard friendship not as a casual association but as an ethical relationship that strengthens individual character and supports responsible social life. Thus, the Thirukkural's insights on friendship remain valuable for understanding the moral and human dimensions of relationships.

ஆய்வுச் சுருக்கம்

மனித வாழ்க்கையின் அடிப்படை உறவுகளில் நட்பு தனித்துவமான இடத்தைப் பெறுகின்றது. குருதியால் உருவாகும் உறவுகளைவிடக் கருத்தாலும் பண்பாலும் உள்ளத்தாலும் உருவாகும் உறவாக நட்பு விளங்குகின்றது. மனிதனை மனிதனாகச் செம்மைப்படுத்துவதிலும், அவனது வாழ்வியல் நெறிகளைச் சீரமைப்பதிலும் நட்பிற்கு முக்கியப் பங்குண்டு. இத்தகைய உயரிய நட்பின் இலக்கணத்தைத் திருவள்ளுவர் திருக்குறளில் தனி அதிகாரங்களாகப் பகுத்து விளக்கியுள்ளார். சங்க இலக்கியமான புறநானூறு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியார், பழமொழி நானூறு ஆகிய இலக்கியங்களில் இடம்பெறும் நட்புச் சிந்தனைகளுடன் திருக்குறளின் நட்பியல் கருத்துகளை ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்: திருக்குறள், நட்பு, நட்பின் இலக்கணம், உண்மையான நண்பன், புறநானூறு, நாலடியார், ஒப்பிலக்கியம், அறவியல்.

© 2019 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS

How to cite this article: Alibava, U. (2019). திருக்குறளில் நட்பு [Friendship in Thirukkural]. *KALANJIYAM – International Journal of Tamil Studies, 2*(n09), 1–14.
Copyright and licence: © 2019 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

மனிதன் தனித்து வாழ்வதற்குப் படைக்கப்பட்டவன் அல்லன். அவனது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பிற மனிதர்களின் துணையும் தொடர்பும் தேவைப்படுகின்றன. குடும்ப உறவுகள் இயற்கையாக அமைகின்றன. ஆனால் நட்பு என்பது ஒருவரின் பண்பு, சிந்தனை, ஒழுக்கம், அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகும் உயரிய உறவாகும். இவ்வுறவு ஒருவரது வாழ்வில் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருவதோடு, தவறான வழியில் செல்லும்போது நல்வழிப்படுத்தும் ஆற்றலையும் கொண்டுள்ளது.

நட்பு என்பது ஒருவரோடு ஒருவர் பழகுவதும், ஒன்றாகப் பொழுதுபோக்குவதும் மட்டுமன்று. நண்பனின் துன்பத்தைத் தன்னுடைய துன்பமாகக் கருதுவதும், அவனது குறைகளை எடுத்துரைத்துத் திருத்துவதும், அவன் தவறிழைக்கும்போது அவனைத் தடுத்து நிறுத்துவதுமே உண்மையான நட்பின் அடையாளங்களாகும். இத்தகைய வாழ்வியல் உண்மையைத் திருவள்ளுவர் மிக நுட்பமாக எடுத்துரைக்கின்றார்.

திருக்குறளில் நட்பு என்பது தனித்த ஓர் உறவியல் கருத்தாக மட்டும் அமையாமல், அறம், ஒழுக்கம், அறிவு, பண்பு, சமூகப் பொறுப்பு ஆகியவற்றோடு இணைந்த வாழ்வியல் நெறியாக அமைந்துள்ளது. இதனைப் பிற தமிழ் இலக்கியங்களின் நட்புச் சிந்தனைகளோடு ஒப்பிட்டு ஆராயும்போது தமிழர் பண்பாட்டில் நட்பிற்கு வழங்கப்பட்ட உயரிய இடம் புலனாகின்றது.

திருக்குறளில் நட்பின் கட்டமைப்பு

திருவள்ளுவர் பொருட்பாலில் நட்பு தொடர்பான கருத்துகளைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார். நட்பு, நட்பாராய்தல், தீ நட்பு, கூடா நட்பு ஆகிய அதிகாரங்கள் நட்பின் தோற்றம், தேர்வு, நிலைத்தன்மை, தவிர்க்கப்பட வேண்டிய உறவு ஆகியவற்றை விளக்குகின்றன.

நட்பின் இலக்கணம்

பார்க்கும் போது மனம் மகிழாமல், முகம் மட்டுமே மலரப் பழகுவது நட்பு அன்று. அன்பால் மனமும் மலரப் பழகுவதே நட்பு என வள்ளுவர் நட்பிற்கு இலக்கணம் வகுக்கிறார்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு (குறள். 786)

எனும் இக்குறள் நெஞ்சமும் மகிழப் பழக வேண்டும் என்று குறிப்பிடுகிறது. புறத்தோற்றத்திற்கும் அகத்தோற்றத்திற்கும் இடையிலான வேறுபாட்டையும் இக்குறள் உணர்த்துகின்றது. முகத்தில் சிரிப்பை வெளிப்படுத்துவது எளிது எனக்

கூறும் வள்ளுவர் உள்ளத்தில் அன்பை நிலை நிறுத்துவது மட்டுமே உண்மையான நட்பாகும் எனவும் குறிப்பிடுகிறார். இந்தக் குறளுக்கு ஒப்புமையாக ஒரு புறநானூற்றுப் பாடல் உள்ளது. கோப்பெருஞ் சோழன் என்கின்ற மன்னனும் பிசிராந்தையார் என்கின்ற புலவரும் ஒருவரை ஒருவர் காணாமலேயே நட்புக் கொள்கின்றனர். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விடத் துணிகிறான். அப்போது கோப்பெருஞ்சோழன் தம் நண்பர் பிசிராந்தையாருக்கும் தன்னருகே இருக்க இடன் ஒழிக்க என்று கேட்டு அப்பாடலைப் பாடுகிறான். அப்பாடலில் அவன் எல்லோரையும் பார்த்துக் கூறுகிறான்: 'கேள்வி அளவால் தானே ஒருவரை ஒருவர் அறிந்துள்ளீர். ஒரு போதும் நீங்கள் சந்தித்ததும் இல்லையே. பல ஆண்டுகள் பழகிய நேரடித் தொடர்பு இல்லாமலே உள்ளம் கலந்து பழகியவர் தாமே நீங்கள் இருவரும். இதனால், அவர் இங்கு இந்நிலையே வருவரென்பது எளிதல்ல' என்று கருதி நீங்கள் ஐயப்படாதீர்கள் என்று எடுத்துரைக்கும் கோப்பெருஞ்சோழன் எல்லோரையும் பார்த்து நிறைந்த அறிவுடையவர்களே என்று அழைக்கிறான். அழைத்துப் பிசிராந்தையாரைப் பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்கிறான். 'அவன் என்றும் என்னை இகழாத இனிய பண்பினன்' என்கிறான். 'உள்ளம் கலந்த நண்பன்' என்று எடுத்துரைக்கிறான். 'புகழ் கெட்டு வரும் பொய்ம்மை வாழ்வை விரும்பாதவன்' என்று அடையாளம் காட்டுகிறான். 'அவன் பெயரையே 'சோழன்' என்று கூறிக் கொள்ளுமளவு பேரன்பு உடையவன்' என்று பண்பு பாராட்டுகிறான். அப்படிப்பட்ட என் இனிய நண்பனான அவன், 'இவ்வாறு யான் துயர் கொண்ட காலத்திலேயும் வாராது அங்கே நிற்கவே மாட்டான். இப்பொழுதே வருவான். அவனுக்கும் என்னுடனிருக்க இடம் ஒதுக்குங்கள்' என்று கேட்டுப் பாடுகிறான்.

'கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய,
வழுவின்று பழகிய கிழமையர் ஆயினும்,
அரிதே, தோன்றல்! அதற்பட ஒழுகல்' என்று
ஐயம் கொள்ளன்மின், ஆரறி வாளீர்!
இகழ்விலன்; இனியன்; யாத்த நண்பினன்;
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே;
தன்பெயர் கிளக்கும் காலை, 'என்பெயர்
பேதைச் சோழன்' என்னும், சிறந்த
காதற் கிழமையும் உடையன்; அதன் தலை,
இன்னதோர் காலை நில்லலன்;
இன்னே வருகுவன்; ஒழிக்க, அவற்கு இடமே! (புறம். 216)

என்பது அப்பாடல். இந்நிகழ்விற்குச் சான்றாகப் புறநானூற்றில் இன்னொரு பாடலும் உள்ளது. கோப்பெருஞ் சோழன் சொன்னவாறே பிசிராந்தையார் அங்கு வந்து விட்டார். அதனைப் பார்த்த பொத்தியார் என்னும் புலவர் வியந்து பாடுகிறார். இவனை இழந்த சோழதேசம் என்னாகுமோ என்று இரங்கிக் கையறு நிலையில் பாடுகிறார்.

நினைக்கும் காலை மருட்கை உடைத்தே,
எனைப்பெரும் சிறப்பினோடு ஈங்கிது துணிதல்
அதனினும் மருட்கை உடைத்தே பிறன் நாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி,
இசைமரபு ஆக, நட்புக் கந்தாக,
இனையதோர் காலை ஈங்கு வருதல்;
'வருவன்' என்ற கோனது பெருமையும்,
அது பழுது இன்றி வந்தவன் அறிவும்,
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே!
அதனால், தன்கோல் இயங்காத் தேயத்து உறையும்
சான்றோன் நெஞ்சுரப் பெற்ற தொன்றிசை
அன்னோனை இழந்தஇவ் வுலகம்
என்னா வதுகொல்? அளியது தானே! (புறம். 217)

என இரங்கிப் பாடுகிறார் பொத்தியார். இப்பாடலில், 'பெருஞ் சிறப்புடன் வாழ்ந்த இம் மன்னன், வடக்கிருந்து உயிர்விட எண்ணினான். அதுவே வியப்பைத் தருவது. பிற நாட்டிலே வாழும் விளக்கமான சான்றோன், புகழே மேன்மையாகவும் நட்பே பற்றுக்கோடாகவும் கருதினவனாக, இத் துயரமுள்ள காலத்திலே இங்கு வந்தானே, அஃது அதனினும் வியப்புத் தருவது. இவ்வாறு , 'அவன் வருவான்' எனச் சொல்லிய வேந்தனின் நட்புமிகுதியும், அது பழுதுபடாமல் வந்தவனது அறிவும், எண்ண எண்ணப் பெருவியப்பாக விளங்குகின்றன. ஆகவே, தன் ஆட்சி செல்லாத இடத்திலுள்ள சான்றோன் நெஞ்சிலும் இடம்பெற்ற, பெரும்புகழை உடையவனான பெரியோனை இழந்த இச் சோழ தேசம், எவ்வாறு துன்பங்களுக்கு இரையாகுமோ? அதுவே இரக்கத்தைத் தருகின்றது!' என்று அவர் குறிப்பிடுகிறது. இவ்விரு பாடல்களிலும் நட்பின் திண்மை வெளிப்படுகிறது.

திருக்குறள் உள்ளத்தின் அன்பை நட்பின் அடிப்படையாகக் கூறுகின்றது. புறநானூறு உண்மையான நண்பனின் இனிய பண்பையும் பொய்யற்ற இயல்பையும் எடுத்துரைக்கின்றது. தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் நட்பின் பெருமையை வாழ்வியல் நிகழ்வுகளின் வழியாக எடுத்துரைக்கும் நூலாகப் புறநானூறு திகழ்கின்றது. குறிப்பாகக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இடையே நிலவிய நட்பு, தமிழர் பண்பாட்டில் நட்பிற்கு வழங்கப்பட்ட உயர்ந்த இடத்தை வெளிப்படுத்துகின்றது. பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனை நேரில் காணாமலேயே அவனது பண்புகளையும் புகழையும் அறிந்து நட்புக் கொண்டார். இருவருக்கும் இடையே உருவான நட்பு, உடல்சார் நெருக்கத்தைவிட உள்ளம் சார்ந்த நெருக்கமே சிறந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

'வரகரிசிச் சோற்றையும், அதனுடன் வேளையினது பூவை வெண்மையான தயிரிற் பெய்து சமைத்த புளித்த கூழையும், அவரை கொய்பவர் நிறைய உண்ணுகின்ற தென்னகத்துப் பொதிய மலையிலே, அம்மலைக்கு உரியவரான

பாண்டியனின் நாட்டிலே, என்னையே நினைத்துக் கொண்டிருப்பவனான பிசிரோன் என்பவன் உள்ளான். என் உயிரைத் தன்னுயிராக எண்ணிப் பேணும் கலந்த நட்பினன் அவன். செல்வம் உள்ளபோது அவன் வாராது நின்றிருந்தாலும், என் உயிருக்கு இன்னாமை நேரப்போகின்ற இந் நிலையில், இங்கு வாராது அவன் இருக்கவே மாட்டான். அறிவீராக, சான்றோரே!' எனக் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரின் அன்பின் திண்மையை,

கவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்
தாதொரு மறுகின் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ,
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை
அவரை கொய்யுநர் ஆர மாநதும்
தென்னம் பொருப்பன் நன்னாட்டு உள்ளும்
பிசிரோன் என்ப, என் உயிர்ஓம் புநனே;
செல்வக் காலை நிற்பினும்,
அல்லற் காலை நில்லலன் மன்னே (புறம். 215)

எனும் பாடலில் எடுத்துரைக்கின்றான். இப்பாடலில் உள்ள,

பிசிரோன் என்ப, என் உயிர் ஓம்புநனே;
செல்வக் காலை நிற்பினும்,
அல்லற் காலை நில்லலன் மன்னே

எனும் அடிகள், செல்வம் நிறைந்த காலத்தில் அருகில் இருப்பவனைவிடத் துன்பம் சூழ்ந்த காலத்தில் துணையாக நிற்பவனே உண்மையான நண்பன் என்பதை உணர்த்துகின்றன. இதனைத் தான் வள்ளுவர்,

அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு (குறள். 787)

எனும் குறளில் 'நண்பனுக்கு அழிவு ஏற்படக்கூடிய செயல்களைத் தடுத்து, அவனை நல்வழிப்படுத்தி, துன்பம் நேரும்போது அவனுடன் சேர்ந்து துன்பப்படுவதே நட்பின் இயல்பு' என எடுத்துக்காட்டுகிறார். புறநானூறு நட்பின் பெருமையை வரலாற்று நிகழ்வின் வழியாக உணர்த்துகின்றது; திருக்குறள் அதே நட்பின் இயல்பை அறவியல் கோட்பாடாக வரையறுத்துரைக்கின்றது.

உடனடியாக உதவும் நட்பு

பலர் முன்னே ஆடை நழுவும்போது உடனே சென்று உதவும் கை போல, நண்பனுக்குத் துனபம் வந்த போது உடனே சென்று போக்குபவனே சிறந்த நண்பன் என்கிறார் வள்ளுவர். இதனையே அவர்,

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள். 788)

எனும் குறளில் எடுத்தோதுகிறார். இதனையே கோப்பெருஞ்சோழனின்,

இன்னதோர் காலை நில்லலன்;
இன்னே வருகுவன்; ஒழிக்க, அவற்கு இடமே! (புறம். 216)

எனும் புறநானூற்றுப் பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. திருக்குறள் நண்பனின் இடரை உடனடியாகக் களையும் செயல்முனைப்பை வலியுறுத்துகின்றது. புறநானூறோ துன்பக் காலத்தில் நண்பன் வந்து துணைநிற்பான் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது.

ஆடை நழுவியவுடன் அதனைச் சரிசெய்யக் கை எவ்விதத் தாமதமும் இன்றி விரைந்து செயல்படுகின்றது. அதுபோல நண்பனுக்கு இடர் நேர்ந்தவுடன் தாமதமின்றி உதவுவதே சிறந்த நட்பு என்கிறார் வள்ளுவர்.

புறநானூற்றில் கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் கொண்ட நட்பிலும் இதே துணைநிலை வெளிப்படுகின்றது. ஒருவருடைய துன்பம் மற்றொருவருடைய துன்பமாக மாறும் நிலையை இரு இலக்கியங்களும் வெவ்வேறு வடிவங்களில் எடுத்துரைக்கின்றன.

முகத்துக்கு முகம் பாராட்டக் கூடாது

வள்ளுவர் இன்னொரு குறளில் நட்புடையவர்கள் முகத்துக்கு முகம் பாராட்டிச் சொன்னாலும் நட்பின் தன்மை கெட்டுவிடும் என்கிறார். 'இவர் எமக்கு இத்தனை அன்பு உடையவர்; நாமும் இவர்க்கு இப்படியே' என்று ஒருவரை ஒருவர் அலங்காரமாகப் பாராட்டிச் சொன்னாலும் நட்பு அற்பமானதாகப் போய்விடும்' என்கிறார்.

இனையர் இவர்எமக்கு, இன்னம் யாம் என்று
புனையினும் புல்என்னும் நட்பு (குறள். 790)

என்பது இதற்கு அவர் காட்டும் குறளாகத் திகழ்கிறது.

நட்பின் அரியணை

நட்பின் அரியணை எது என்றால், எப்போதும் மாறாமல், முடிந்தபோது எல்லாம் எல்லா நிலைகளிலும் ஒருவர்க்கு உருவர் உதவுவதுதான் என்று எள்ளுவர் எடுத்துரைக்கிறார். இதனை,

நட்பிற்கு வீற்றிருக்கை யாதுஎனில், கொட்புஇன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை (குறள். 789)

எனக் குறள் வலியுறுத்துகின்றது.

நட்பு என்பது காலத்தின் போக்கில் உருவாகும் வெறும் பழக்கமன்று. அது மனத்தின் ஆழத்தில் வேரூன்ற வேண்டிய பண்புநிலை. எனவே, நட்பின் பெருமையை எடுத்துரைக்கும் வள்ளுவர், அதன் உண்மையான இயல்பையும் தெளிவுபடுத்துகின்றார்.

உண்மையான நட்பின் இயல்பு

திருவள்ளுவர் நட்பின் அடிப்படையாக உள்ளத்தின் ஒற்றுமையைக் குறிப்பிடுகின்றார். ஒருவரோடு ஒருவர் நீண்டகாலம் பழகியிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இருவருடைய எண்ணங்களும் உணர்வுகளும் ஒத்திருக்குமானால் நட்பு தானாகவே உருவாகிவிடும்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். (குறள் 785)

என்று வள்ளுவர் இதனை விளக்குகிறார். இக்குறள் நட்பின் தோற்றத்தை உளவியல் அடிப்படையில் ஆராய்கின்றது. உடலால் நெருங்கிப் பழகுவதைவிட உள்ளத்தால் நெருங்குவதே சிறந்தது என்பது வள்ளுவர் உணர்த்தும் உண்மையாகும்.

கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய,
வழுவின்று பழகிய கிழமையர் ஆயினும்,
அரிதே, தோன்றல்! அதற்பட ஒழுகல் என்று
ஐயம் கொள்ளன்மின், ஆரறி வாளிர்! (புறம். 216)

எனப் புறநானூற்றில் கோப்பெருஞ் சோழன் விளம்புகிறார். ஒருவனோடு ஒருவன் நட்புக் கொள்வதற்கு அருகருகே இருப்பதோ, நெருங்கிப் பழகுவதோ வேண்டியதில்லை. இருவரது எண்ணமும் ஒத்திருந்தால் அதுவே நட்பு என்னும் தோழமையைக் கொடுக்கும் என வள்ளுவர் எடுத்துரைக்கிறார். இது இலக்கணம் என்றால் இதற்கு இலக்கியமாகக் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பைப் பார்க்க முடிகிறது. இரு இலக்கியங்களும் நேரில் பழகுவதைவிட உள்ளத்தின் ஒற்றுமையே நட்பிற்கு அடிப்படை என உணர்த்துகின்றன. புறநானூற்றில் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் உறவு இதற்கான வாழ்வியல் சான்றாக அமைகின்றது.

நட்பில் நண்பனைக் கண்டித்துத் திருத்தும் பண்பு

நட்பு என்பது ஒன்றாகச் சிரித்து மகிழ்வதற்காக மட்டும் உருவாகுவதில்லை. நண்பன் அளவுக்கு மீறித் தவறிழைக்கும்போது அவனைக் கண்டித்துத் திருத்துவதற்காகவும் உருவாகின்றது. நண்பனின் நன்மையைக் கருதி உண்மையை எடுத்துரைப்பதே நட்பின் அறமாகும் என்பதை வள்ளுவர்,

நகுதல் பொருட்டுஅன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு (குறள். 784)

என்று எடுத்துரைக்கிறார். இங்கு திருவள்ளுவர் நட்பை வெறும் உணர்ச்சிசார் உறவாகக் கருதாமல், ஒழுக்கத்தை வளர்க்கும் சமூக நிறுவனமாகவே பார்க்கின்றார். இக்குறளின் கருத்தை அப்படியே காட்டுகிற வகையில் நாலாடியாரிலும் ஒரு பாடல் உள்ளது.

இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர்; - கலந்தபின்
தீமை எடுத்துரைக்கும் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரின் கடை (நாலடியார் 227)

எனுமம் பாடல் நாலடியார் நட்பிற் பிழை பொறுத்தல் அதிகாரத்தில் அமைந்துள்ளது. இப்பாடல், 'விளங்குகின்ற நீரினையுடைய கடலினது குளிர்ந்த கரையை உடையவனே! ஒருவரோடு கலந்து நட்புச் செய்த பின், அவருடைய குற்றங்களை எடுத்துக் கூறும் உறுதியான அறிவில்லாதவர், குற்றங்களைச் செய்த அவரினும் கீழ்ப்பட்டவராவார்; ஆதலால் பெரியோர்கள் ஒரவரோடு கலந்து நட்புச் செய்தபின், அவர்கள் தமக்குத் துன்பங்களைச் செய்தாலும், அக்குற்றங்களைக் கவனிக்க மாட்டார்கள்' எனும் கருத்தினை வெளியிடுகிறது. நண்பனை அவனுடைய நன்மைக்காகக் கண்டித்துத் திருத்த வேண்டும் எனத் திருக்குறள் வலியுறுத்துகின்றது. நாலடியார் நண்பனின் குறைகளைப் பிறரிடம் பரப்பிப் பழிப்பதைத் தவிர்க்கச் சொல்கின்றது. நேர்மையான அறிவுரை மற்றும் புறம்பேசுதல் ஆகியவற்றின் வேறுபாடு இங்கு தெளிவாகிறது.

பண்புள்ளவர் நட்பு

படிக்கும் போதெல்லாம் மகிழ்ச்சி தரும் நூலின் இன்பம் போல நல்ல குணமுள்ளவரோடு கொண்ட நட்பு அவரோடு பழகும் போதெல்லாம் மகிழ்ச்சி தரும் எனக் கூறுகிறார் வள்ளுவர்.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (குறள். 783)

என்பது அக்குறள். நல்ல நூலை மீண்டும் மீண்டும் படிக்கும்போது அதன் பொருள் நயம் விரிவடைவதைப் போல, பண்புடையவர்களுடன் பழகப் பழக அவர்களுடைய நட்பின் சிறப்பு அதிகரிக்கும் என்பதும் இதன் கருத்தாகும். இதே கருத்து நாலடியாரிலும் வெளிப்படுகிறது.

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே; - குருத்திற்
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ, என்றும்
மதுர மிலாளர் தொடர்பு (நாலடியார் 211)

எனும் பாடல், 'நூல்களின் உட்கருத்தினை உணர்ந்து அவற்றைக் கற்றறிந்தவர்களுடைய நடபானது, கரும்பினை நுனியிலிருந்து அடிவரை தின்றுகொண்டு செல்வது போன்று வரவர இன்பம் மிகுவதாகும்' என்று கூறுகிறது. எக்காலத்தும் இனிமைக் குணம் இல்லாதவர்களுடைய நட்பு, அக்கரும்பினை அடியிலிருந்து நுனியை எதிர்நோக்கித் தின்றதையொத்து வரவர இன்பம் குறைவதாகும் என்றும் குறிப்பிடுகிறது. நாலடியாரின் அறவியல் நோக்கிலும் திருக்குறளின் இக்கருத்திலும் நல்லிணக்கம் காணப்படுகின்றது. இரு நூல்களும்

மனிதனுடைய நட்பு வட்டம் அவனது பண்புநிலையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றது என்பதை வலியுறுத்துகின்றன.

நல்லவர்களின் நட்பு காலத்தால் வளர்ந்து இனிமை தரும் என்பதைத் திருக்குறள் நூலின் நயத்தாலும், நாலடியார் கரும்பின் இனிமையாலும் விளக்குகின்றன.

அறிவுடையார் - அறிவில்லதார் நட்பு

பிறை, நாளும் வளர்வதுபோல, அறிவுடையார் நட்பு வளரும்; முழு நிலவு தேய்வது போலப் பேதைகளின் நட்பு தேயும் என்பதை வள்ளுவர்,

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு (குறள். 782)

எனப் பதிவு செய்கிறார். நல்லவர்களின் தொடர்பு மனிதனை உயர்த்தும்; தீயவர்களின் தொடர்பு அவனுடைய பண்பையும் வாழ்க்கை நிலையையும் சீர்குலைக்கும் என்பதையும் வள்ளுவர் இக்குறளில் நுட்பமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

அரிய நட்பு

சம்பாதிப்பதற்கு நட்பைப் போல அரிய பொருள் வேறு எவை உண்டு? அதைச் சம்பாதித்து விட்டால் பிறர் புக முடியாதபடி நம்மைக் காப்பதற்கு அரிய பொருள் வேறு எவை உண்டு? என்று வள்ளுவர்,

செயற்கரிய யாவுள நட்பின்? அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு ? (குறள். 781)

எனும் குறளில் வினாத் தொடுக்கிறார். நட்பு உருவாகுவது எளிது. ஆனால் அதனைத் தக்கவைத்துக் கொள்வது அரிது. நட்பை உருவாக்குவதைவிட அதனைப் பாதுகாத்து வளர்ப்பதே கடினமான செயல் என்பது இக்குறளின் மையக்கருத்தாகும். மனித உறவுகளின் உளவியலை இரண்டு அடிகளில் விளக்கும் ஆற்றல் வள்ளுவரின் சிந்தனைச் செறிவுக்குச் சான்றாக அமைகின்றது.

நட்பை உருவாக்குவதைக் காட்டிலும் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதே மனித வாழ்வில் முக்கியமானதாகும். ஒருவர் வெளிப்படுத்தும் இனிய சொற்களையும் முகமலர்ச்சியையும் மட்டும் கொண்டு அவருடைய உண்மையான பண்பை அறிந்துகொள்ள இயலாது.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (குறள். 791)
குணமும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு (குறள். 793)

என்பன வள்ளுவரின் வாய்மொழிகள். ஒருவருடைய குணம், குடும்பப் பின்னணி, குறைகள், அவருடன் தொடர்புடையவர்கள் ஆகியவற்றை ஆராய்ந்த பின்னரே நட்புக்

கொள்ள வேண்டும் என வள்ளுவர் அறிவுறுத்துகின்றார். பழமொழி நானூறு உள்ளிட்ட நீதிநூல்களிலும் மனிதர்களின் பண்புகளை ஆராய்ந்து பழகுதல், தீயவர்களின் தொடர்பை விலக்குதல் போன்ற வாழ்வியல் அறிவுரைகள் இடம்பெறுகின்றன.

நட்பில் பொறுத்தலும் பழைமை பாராட்டலும்

பழகிய நட்பின் உரிமையால் நண்பர் செயல்படுவதற்கு ஒப்பாவிட்டால் அந்நட்பால் என்ன பயன் என்பதை,

> பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
> செய்தாங்கு அமையாக் கடை (குறள். 803)

எனக் கேட்கிறார் வள்ளுவர். நாலடியாரோ,

> இறப்பவே தீய செயினும் தம் நட்டார்
> பொறுத்தல் தகுவதொன்று அன்றோ - நிறக்கோங்கு
> உருவவண்டு ஆர்க்கும் உயர்வரை நாட!
> ஒருவர் பொறைஇருவர் நட்பு (நாலடியார் 223)

என்று எடுத்துரைக்கின்றது. இது, 'நல்ல நிறமுள்ள கோங்க மலரின்கண்ணே அழகிய வண்டுகள் ஒலிக்கும் உயர்ந்த மலைகள் சூழ்ந்த நாட்டை உடையவனே! ஒருவருடைய பொறுமை இருவருடைய நட்புக்குக் காரணமாகும்; ஆதலால் ஒருவர் தம் நண்பர் மிகவும் தீய செயல்களைச் செய்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்வதுதான் அவருடைய பெருந்தன்மைக்குத் தகுந்த செயலாகும்' என்று குறிப்பிடுகின்றது. பழகிய நண்பனின் உரிமையை மதித்தல், அவனுடைய குறைகளைப் பொறுத்தல் ஆகியவை நட்பை நிலைநிறுத்தும் பண்புகள் என இரு நூல்களும் உணர்த்துகின்றன.

நட்பை ஆராய்ந்து தேர்ந்தெடுத்தல்

ஒருவனிடம் நட்புடன் பழகுவதற்கு முன் ஒன்றுக்குப் பலமுறை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் அறிவுறுத்துகிறார். நட்பை விரும்பிச் செய்வார்க்கு ஒருவனை ஆராயாது நட்புச் செய்வதுபோலக் கேடில்லை; நட்புச் செய்தபின் அவனை விடவும் இயலாது. ஆராய்ந்து ஆராய்ந்து கொள்ளாமல் நட்புச் செய்வது ஒருவனுக்குச் சாகும் வரையிலும் துன்பம் தரும். குணம், குடிப்பிறப்பு, குற்றம், குறைவில்லாத சுற்றம் ஆகியவற்றை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும் என்னும் கருத்துகளை வள்ளுவர்,

> நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
> வீடில்லை நட்பாள் பவர்க்கு (குறள். 791)
> ஆய்ந்துஆயந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
> தான்சாம் துயரம் தரும் (குறள். 791)
> குணமும் குடிமையும் குற்றமும் குன்றா
> இனனும் அறிந்தியாக்க நட்பு (குறள். 791)

எனும் குறள்களில் அடுக்குகிறார். நாலடியாரோ ஆராய்ந்து நட்புக் கொள்வதற்கு,

யானை யானையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்; - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்
காழ்த்ததூஉம் அஃதேயாம் (நாலடியார் 213)

என வழிகாட்டுகிறது. 'யானையை ஒத்தவருடைய நட்பினை நீக்கி, நாயை ஒத்தவருடைய நட்பினைத் தழுவிக் கொள்ள வேண்டும்! ஏனெனில் யானை தன் பாகனென்று நன்றாகத் தெரிந்திருந்தும் சமயம் நேர்ந்தால் அவனையே கொல்லும்; ஆனால் நாயோ, தன்னை வளர்த்தவன் தன்மீது வீசிய வேல் தன் உடம்பில் அழுந்திக் கிடக்கவும், அவனை நேரில் கண்டதும் மகிழ்ந்து வாலை ஆட்டும்' என இப்பாடல் குறிப்பிடுகிறது. நட்புக் கொள்வதற்கு முன் ஒருவரின் இயல்பை ஆராய வேண்டும் என இரு நூல்களும் வலியுறுத்துகின்றன.

நட்பில் பொறுமையும் விட்டுக்கொடுத்தலும்

பழகிய நட்பின் உரிமையால் நண்பர் செயல்படுவதற்கு ஒப்பாவிட்டால் அந்நட்பால் பயன் என்ன? என்று வினாத்தொடுக்கிறார். நட்பில் பொறுமையும் விட்டுக் கொடுத்தலும் வேண்டும் என்கிறார்.

பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை (குறள். 803)

என்பது இதனைச் சுட்டிக் காட்டகிறது. பழமொழி நானூறும் இதே கருத்தை,

தம்தீமை இல்லாதார் நட்டவர் தீமையையும்
எம்தீமை என்றே உணர்பதாம் – அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப!
ஒருவர் பொறைஇருவர் நட்பு (பழமொழி நானூறு 132)

என வெளியிடுகிறது. 'அழகிய குளிர்ந்த கரையை மோதுகின்ற அலைகள் கரைமீது வந்து உலாவும் மிக்க நீரினையுடைய கடலினது கரையை உடையவனே! நண்பர் இருவருள் ஒருவர் குற்றஞ் செய்யினும் மற்றொருவர் பொறுத்துக் கொள்வரேல், அஃது இருவருடைய நட்பும் நிலைபெறுவதற்குரிய வழியாகும்; ஆதலால், நண்பர்க்குத் தம்மால் செய்யப்பட்டதொரு தீமையும் இல்லாதவர், அந்நண்பர் தமக்கச் செய்த தீமையையும், எம்மால் செய்யப்பட்ட தீமையென்றே நினைத்தும் பொறுத்துக் கொள்வர்' என இப்பாடலில் முன்றுறையரையனார் விளக்குகிறார். ஒருவர் பொறுமை இருவருடைய நட்பும் நீடிப்பதற்குக் காரணமாக இருக்கின்றது. தம் நண்பர் செய்த குற்றத்தையும் நல்லோர் தாம் செய்த குற்றமாகவே கருதிப் பொறுத்துக் கொள்வார் என்று அவர் கருத்து வெளியிடுகிறார்.

நண்பனின் குறைகளைப் பொறுத்தல், விட்டுக்கொடுத்தல் ஆகியவை உறவின் நிலைத்தன்மைக்கு அடிப்படை என இரு நூல்களும் வலியுறுத்துகின்றன.

போலி நட்பின் இயல்பு

மனத்தால் நம்மோடு சேராதவரை எந்தக் காரியத்திலும் அவாகளின் சொல்லைக் கண்டு நம்ப முடியாது என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். எனவே நண்பர்கள் மனத்தால் ஒன்றிணைய அவர்,

மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று (குறள். 825)

எனும் குறளில் வலியுறுத்துகிறார்.

வெள்ளம் பகையெனினும் வேறிடத்தார் செய்வதென்?
கள்ளம் உடைத்தாகிச் சார்ந்த கழிநட்பு
புள்ளொலிப் பொய்கைப் புனலூர! அஃதன்றோ
அள்ளில்லத் துண்ட தனிசு (பழமொழி நானூறு 297)

என்று பழமொழி நானூறும் பகர்கிறது. 'பறவைகள் ஒலிக்கின்ற குளங்களையுடைய நீர்வளம் மிக்க ஊரையுடையவனே! வேற்று நாட்டிலிருக்கும் பகைவர் வெள்ளம் போன்று மிகப் பலராயிருப்பினும் அவர் செய்யத்தக்க துன்பம் யாது? வஞ்சனை உடையவர்களாய்த் தம்மைச் சேர்ந்திருக்கின்ற மிக்க நண்பர்கள் செய்யும் துன்பமே பெரிதாகும். ஆதலால், அந்நட்பு, ஒரே வீட்டில் குடியிருப்பவரிடத்து வாங்கியுண்ட கடனைப் போல்வதாகும்' என முன்றுறையரையனார் இப்பாடலில் எடுத்துரைகக்கிறார். ஒரே வீட்டில் குடியிருப்பவரிடம் கடன் வாங்கினால், அவர் அடிக்கடி அக்கடனைக் கேட்டுத் துன்புறுத்துவர். அவ்வாறே, நண்பர்களைப் போன்று தம்மை நெருங்கியிருக்கும் அடுத்துக் கெடுக்கும் பகைவரும் இடைவிடாது துன்புறுத்திக் கொண்டே இருப்பர் எனும் வாழ்வியல் உண்மையை இப்பாடல் உணர்த்துகிறது.

மனத்தில் உண்மையான ஒற்றுமை இல்லாதவர்களைச் சொற்களை மட்டும் கொண்டு நம்பக்கூடாது என்றே இரு நூல்களும் எடுத்துரைக்கின்றன.

திருக்குறளும் பிற அற இலக்கியங்களும் உணர்த்தும் நட்பு

நல்ல நட்பு மனிதனை உயர்த்தும்; தீய நட்பு மனிதனைத் தாழ்த்தும். நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு ஆகிய அதிகாரங்களின் வழியாக நட்பின் நேர்மறையான பண்புகளையும் போலியான நட்பால் ஏற்படும் பாதிப்புகளையும் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

நாலடியார், பழமொழி நானூறு போன்ற அறநூல்களிலும் தீயவர்களோடு பழகுவதால் ஏற்படும் இழிவுகளும், நல்லவர்களின் தொடர்பால் கிடைக்கும் உயர்வுகளும் எடுத்துரைக்கப் படுகின்றன.

திருக்குறள் நட்பைத் தனிமனித உணர்வாக மட்டும் கருதாமல் அறவியல் சார்ந்த வாழ்வியல் நெறியாக விளக்குகின்றது. புறநானூறு கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பின் வழியாக உள்ளத்தின் ஒற்றுமையையும் நன்றியுணர்வையும்

வெளிப்படுத்துகின்றது. நாலடியார் நல்லவர்களின் தொடர்பு மனிதனுடைய பண்பை உயர்த்தும் என்ற அறவியல் நோக்கை முன்னிறுத்துகின்றது. பழமொழி நானூறு உள்ளிட்ட நீதிநூல்கள் மனிதர்களின் இயல்பை ஆராய்ந்து உறவுகளை அமைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. திருவள்ளுவர் நட்பின் தோற்றம், வளர்ச்சி, தேர்வு, நிலைத்தன்மை, தவறான நட்பின் விளைவுகள் எனப் பல நிலைகளையும் முறையாக வகைப்படுத்தியுள்ளார். உண்மையான நட்பு என்பது மகிழ்ச்சியில் பங்கெடுப்பது மட்டுமல்ல; துன்பத்தில் துணைநிற்பதும் தவறும்போது திருத்துவதுமாகும் என்பதை வள்ளுவரின் வழியில் பிற நூல்களும் எடுத்துரைக்கின்றன.

ஒருவனுடைய வாழ்வில் எத்தனை நண்பர்கள் இருக்கின்றார்கள் என்பது பெருமையன்று; அவனுடைய துன்பத்தில் எத்தனை நண்பர்கள் துணை நிற்கின்றார்கள் என்பதே நட்பின் உண்மையான அளவுகோல். திருக்குறளின் நட்பியல் கருத்துகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ சமூகத்திற்கோ உரியனவாக இல்லாமல், உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான வாழ்வியல் அறங்களாகத் திகழ்கின்றன. திருக்குறளில் நட்பு என்பது அன்பால் தொடங்கி, அறிவால் வளர்ந்து, பொறுமையால் நிலைபெற்று, தியாகத்தால் உயர்கின்ற ஓர் அறவாழ்வியல் நெறியாகத் திகழ்கின்றது.

துணைநூற்கள்

1. திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த *திருக்குறள் மூலமும்* பரிமேலழகருரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154 டி.டி.கே. சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 18, 20ஆம் பதிப்பு : ஜூன் 1991.
2. *திருக்குறள் எளிய உரை,* இ. சுந்தரமூர்த்தி உரை, கலாச்சேத்திரா பப்ளிகேஷன்ஸ், கோவிலூர் மடாலயம், 52 குப்பையா தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033, முதற் பதிப்பு : அக்டோபர் 2015.
3. திருக்குறள், சாலமன் பாப்பையா உரை, கவிதா பப்ளிகேஷன், தபால் பெட்டி எண், 6123, 8 மாசிலா மணி தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 600 017, நான்காம் பதிப்பு : பிப்ரவரி 2012.
4. கலித்தொகை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154 டி.டி.கே. சாலை, சென்னை - 1, பதிப்பு விவரம் இல்லை.
5. உ.வே. சாமிநாதையர், புறநானூறு மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பதிப்பு : 1985.
6. பதினெண் கீழ்கணக்கு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை - 600 098, இரண்டாம் பதிப்பு, 1981.
7. மி. பொன். இராமநாதஞ் செட்டியார், நாலடியார் தெளிவுரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 600 014, மூன்றாம் பதிப்பு : 1989.

8. மி. பொன். இராமநாதஞ் செட்டியார், பழமொழி நானூறு. பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 600 014, இரண்டாம் பதிப்பு : 1991.